**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6**

மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மார்ச்/ஏப்ரல் – **2023**

தாவரவியல் விடைக்குறிப்புகள்

குறிப்பு **:** நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

பகுதி – **I**


ஒரு மதிப்பெண் வினாவிற்கு பொருத்தமான விடை மற்றும் குறியீட்டுடன் விடையளித்தால் மட்டும் மதிப்பெண் வழங்கப்பட வேண்டும்.

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 15 x 1 = 15

| வினா எண் | விடை– A | விடை– B | **மதிப் பெண்** |
|---|---|---|---|
| **1** | இ. (I)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii) | அ. நுண்புழை நீர் | **1** |
| **2** | ஆ. **9 : 7** | ஈ. செயல்படும் பெருவித்து | **1** |
| **3** | இ. Dr. M.S. சுவாமிநாதன் | இ. (I)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii) | **1** |
| **4** | ஈ செயல்படும் பெருவித்து | ஆ. ஆப்பிரிக்க வெப்பமண்டலப் பகுதி | **1** |
| **5** | இ. ஓசோன் | அ **9 : 7** | **1** |
| **6** | அ. நுண்புழை நீர் | இ. அகார் | **1** |
| **7** | இ. பிரேசில் | இ. Dr. M.S. சுவாமிநாதன் | **1** |
| **8** | ஆ. ஆப்பிரிக்க வெப்பமண்டலப் பகுதி | இ. ஓசோன் | **1** |
| **9** | இ அகார் | ஈ. அரிக்கா கட்ச்சு | **1** |
| **10** | ஆ. நீலம் மற்றும் சிவப்பு | அ. தனித்துப் பிரிதல் விதி | **1** |
| **11** | ஆ. DNA -> RNA -> புரதம் | இ. பிரேசில் | **1** |
| **12** | அ. தனித்துப் பிரிதல் விதி | ஈ மண் | **1** |
| **13** | இ. AUG | ஆ. DNA -> RNA -> புரதம் | **1** |
| **14** | ஈ. அரிக்கா கட்ச்சு | இ. AUG | **1** |
| **15** | ஈ. மண் | ஆ. நீலம் மற்றும் சிவப்பு | **1** |

## பகுதி – II

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா என் 24 –க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 6×2=12


| வினா எண் | விளக்கம் | மதிப்பெண் |
|---|---|---|
| 16 | **கான்தரோஃபில்லி :**<br>வண்டுகள் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெற்றலை **கான்தரோஃபில்லி** என அழைக்கிறோம் | 2 |
| 17 | மெண்டலியத்தை மறு ஆய்வு செய்து கண்டறிந்த அறிவியல் அறிஞர்கள்:<br>ஹியூகோ டீ விரிஸ்<br>கார்ல் காரென்ஸ்<br>எரி வான் ஷெர்மார்க் | 2 |
| 18 | மரபணுக்குள்ளே நிகழும் இடைச்செயல்கள் :<br>ஒரே மரபணுவிலுள்ள இரு அல்லீல்களுக்கிடையே இடைச் செயல் நடைபெறுகிறது<br>மரபணு இடைச்செயல்கள்வகை :<br>1. அமைவிடத்திற்குள் நிகழும் இடைச்செயல்<br>2. அமைவிடங்களுக்கு இடையே நிகழும் இடைச்செயல் | 1<br>1 |
| 19 | மரபணு **வரைபடம் :**<br>மரபணுக்களின் அமைவிடத்தையும் அருகருகே உள்ள மரபணுக்களுக்கு இடையேயுள்ள தொலைவு ஆகியவற்றை குறிக்கும் திட்ட வரைபடமே மரபணு வரைபடம் எனப்படும். | 2 |
| 20 | **pBR 322 :**<br><br>$amp^R$ - ஆம்பிசிலின் தடுப்பு மரபணு<br>$tet^R$ - டெட்ராசைக்ளின் தடுப்பு மரபணு | 2 |

| 21 | உடல கலப்பினமாக்கல் :<br><br>வேறுபட்ட செல்களின் உட்கரு அற்ற புரோட்டோபிளாஸ்ட்டை இணைத்துப் பெறப்படுவது சைபிரிட் என அழைக்கப்படுகிறது. இதன் பின்பு உட்கரு இணைவு நடைபெறுகிறது இந்நிகழ்வானது உடல கலப்பினமாக்கல் எனப்படும். | 2 |
|---|---|---|
| 22 | விதைப்பந்து:<br><br>களிமண் மற்றும் இலைமட்குடன்( பசுமாட்டின் சாணம் உட்பட) விதைகளைக் கலந்து உருவாக்கப்படுவது விதைப்பந்து எனப்படும். | 2 |
| 23 | தழை உரமிடல் :<br><br>தழை உரப்பயிர்களை வளர்த்து அவற்றை நேரடியாக வயல்களிலிட்டு உழுவது தழை உரமிடலாகும். | 2 |
| 24 | தாவர திசு வளர்ப்பின் அடிப்படை கொள்கைகள்:<br><br>1. வேறுபாடுறுதல்<br>2. மறுவேறுபாடுறுதல்<br>3. வேறுபாடிழத்தல் (ஏதேனும் 2) | 2 |

## பகுதி – III

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா என் **33** –க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6×3=18


| வினா எண் | விளக்கம் | | மதிப்பெண் |
|---|---|---|---|
| 25 | **ஒட்டுதல்** | **பதியமிடல்** | 3 |
| | இரண்டு வெவ்வேறு தாவரங்களின் பாகங்கள் இணைக்கப்பட்டு அவை தொடர்ந்து ஒரேதாவரமாக வளர்கின்றன. | இம்முறையில் பெற்றோர் தாவரத்தின் தண்டு தாவரத்தோடு ஒட்டியிருக்கும் போது அதிலிருந்து வேர்கள் தோன்றுவதற்கு தூண்டப்படுகிறது. | |


<table>
<tr><td>26</td><td>மெய்யில்லா மடியத்தின் வகைகளின் படம் :<br>
<br>(ஏதேனும் 6 படம் மட்டும்)</td><td>6x½=3</td></tr>
<tr><td>27</td><td>நுனிமூடல் மற்றும் வாலாக்கம் :<br>நுனிமூடல்: முதல் நிலை RNA படியின் (hnRNA) 5’ முனையின் மெத்தில் குளுக்கோசைன் டிரைப்பாஸ்ஃபேட் கொண்டு செய்யப்படும் சிலமாற்றங்கள் நுனிமூடல் என்று அழைக்கப்படுகிறது.<br><br>வாலாக்கம் : hnRNA முன்னோடி mRNA வின் 3’ முனையில் எண்டோநியூக்ளியேஸ் நொதியைக் கொண்டு பிளந்து அவ்விலக்கில் அடினைன் நியூக்ளியோடைட்கள் பலவற்றை இணைப்பதற்கு வால் உருவாக்கம் அல்லது பாலிஅடினைலேஷன் என்று பெயர்.</td><td>1 ½<br><br>1 ½</td></tr>
<tr><td>28</td><td>மரபணுமாற்றபட்ட உணவின் நன்மை மற்றும் தீமைகள்:<br>நன்மைகள் :<br>1. தீங்குயிரி அற்ற அதிக விளைச்சல்.<br>2. பூச்சிக்கொல்லி பயன்பாடு 70% அளவு குறைப்பு.<br>3. மண்மாசுபாடு பிரச்சனையைக் குறைக்கிறது.<br>4. மண் நுண்ணுயிரிக் தொகை பேணப்படுகிறது.<br>(ஏதேனும் மூன்று மட்டும்)<br><br>தீமைகள்:<br>1. கல்லீரலை பாதிக்கிறது, சிறுநிரக செயல்பாட்டை பாதிக்கிறது, புற்றுநோயை உண்டாக்குகிறது.<br>2. ஹார்மோன் சமனின்மை மற்றும் உடல் நிலை சீர்குலைவு.<br>3. பாக்டிரியா புரதத்தின் காரணமாக நோய் எதிர்ப்புத்தன்மை தொகுதியில் மோசமான விளைவுகள் ஏற்படுகிறது.<br>4. பிறழ்ச்சியடைந்த அதிர்ச்சி(திடீர் மிகையுணர்வு வினை) மற்றும் ஒவ்வாமை.<br>5. விதைகளின் உயிர்ப்புத்தன்மை இழப்பு பயிர்களின் முடிவுறுத்தி விதை தொழில் நுட்பத்தில் கானப்படுகிறது.<br>(ஏதேனும் மூன்று மட்டும்)</td><td>1 ½<br><br>1 ½</td></tr>
<tr><td>29</td><td>புதிய காடு வளர்ப்பின் நோக்கம் :<br>(ஏதேனும் மூன்று மட்டும்)</td><td>3</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 30 | சூழ்நிலையியல் : சூழலோடு உயிரினங்கள் செயல்படுவதால் ஏற்படும் உயிரினத் தொகுதிகள் ஆகும்<br>**படிநிலைகள் :**<br>உயிரிகோளம்<br>↑<br>உயிர்மம்<br>↑<br>நிலப்பரப்பு<br>↑<br>சூழல்மண்டலம்<br>↑<br>குழுமம்<br>↑<br>உயிர்த்தொகை<br>↑<br>தனிஉயிரினம் | 1<br>2 |
| 31 | மண் வளத்தை மேம்படுத்துவதில் நுண்ணுயிரி **உட்செலுத்**திகளின் பயன்**பா**டு:<br>எண்ணிக்கையும் அவற்றின் உயிரிய செயல்களை அதிகரிப்பதிலும் உதவுகின்றன<br>**(ஏதேனும் 3 )** | 3 |
| 32 | ஆற்றல் **பிர**மிட் எப்பொதும் **நே**ரானவை:<br>ஆற்றல் பிரமிட்டின் அடிப்பகுதியில் உள்ள உற்பத்தியாளர்கள் முதல் இறுதி மட்டம் வரையுள்ள அடுத்தடுத்த ஊட்ட மட்டங்களில் ஆற்றல் கடத்தல் படிப்படியாக குறைகிறது எனவே ஆற்றல் பிரமிட் எப்பொதும் நேரானது.<br>**(அல்லது)**<br>வரைபடம் | 3 |
| 33 | **கருவுருக்கள்**: கேலஸ் செல்கள் வேறுபாடுகளுக்கு உள்ளாகி உடலக் கருக்களை உருவாக்குகின்றன இவை கருவுருக்கள் எனப்படும்.<br>**செயற்கை விதைகள்**: ஆய்வுக்கூட சோதனை வளர்ப்புமூலம் கிடைக்க கூடிய கருவுருக்களைப் பயன்படுத்தி செயற்கை விதைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. | 3 |

பகுதி – **IV**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கவும் 5 x 5 = 25**

| வினா எண் | விளக்கம் | மதிப்பெண் |
|---|---|---|
| 34 (அ) | சூலின்படம் :<br><br>படம்<br>பாகங்கள்<br>**(அல்லது)** | 3<br>2 |
| 34 (ஆ) | தாவர வழிமுறை வளர்ச்சியின் **முக்கியத்துவம்:**<br>**(ஏதேனும் ஐந்து மட்டும்)** | 5 |
| 35 (அ) | **பசுங்கணிக மரபணு சார்ந்த பாரம்பரியம்:**<br>எடுத்துக்காட்டு : அந்தி மந்தாரை<br>விளக்கம்<br>படம்<br>**(அல்லது)** | 1<br>2<br>2 |
| 35 (ஆ) | தாவரங்**களில் RNA** திரு**த்தம் :**<br>தாவரங்களில் RNA திருத்தங்கள்<br>i) RNA திருத்தங்கள் வரையறை<br>வகைகள்<br>i) பதிலீடு திருத்தம்<br>ii) செருகல் அல்லது நீக்கம்<br><br>RNA திருத்தப்படுதல் படம் | 3<br><br>2 |

| | | |
|---|---|---|
| |  | |
| 36<br>(அ) | உயிர் தொழில் நுட்பவியலின் பயன்பாடுகள் :<br>**(ஏதேனும் ஐந்து மட்டும்)**<br>**(அல்லது)** | 5 |
| 36<br>(ஆ) | ***புரோட்டோபிளாஸ்ட்* வளர்ப்பில் அடங்கியுள்ள படிநிலைகள்:**<br>1. புரோட்டோ பிளாஸ்ட்டை பிரித்தெடுத்தல் (நொதிகளின் பெயர்கள் மேசரோசைம் சார்பிட்டால், மானிட்டால்)<br>2. புரோட்டோ பிளாஸ்ட் இணைவு (PEG -பாலி எத்திலின் கிளைக்கால்)<br>3. புரோட்டோபிளாஸ்ட்டுகள் வளர்ப்பு (MS –வளர்ப்பு ஊடகம் , ப்ளூரசின் - டை அசிட்டேட்)<br>4. உடல் கலப்பின செல்களை தேர்ந்தெடுத்தல் - (சைபிரிட், உடல் கலப்பினமாக்கல்)<br>5. புரோட்டோபிளாஸ்ட் வளர்ப்பு வரைபடம் | 1<br>1<br>1<br>1<br>1 |
| 37<br>(அ) | நீர் பற்றாக்குறை தீர்வை ஆலோசித்தல் மற்றும் **நன்**மைகள் :<br>நீர் பற்றாக்குறை தீர்வு – விளக்கம்<br>நன்மைகள்<br>**(ஏதேனும் மூன்று மட்டும்)**<br>**(அல்லது)** | 2<br>3 |
| 37<br>(ஆ) | நீர் வாழ் **தா**வரங்களின் **வகைகள் மற்றும்** எடுத்துக்**காட்**டுகள்:<br>1. மிதக்கும் நீர் வாழ் தாவரங்கள் – விளக்கம் எடுத்துக்காட்டு ஏதேனும் ஒன்று<br>2. வேரூன்றி மிதக்கும் நீர் வாழ் தாவரங்கள் – விளக்கம் எடுத்துக்காட்டு – ஏதேனும் ஒன்று<br>3. நீருள்மூழ்கி மிதக்கும் நீர் வாழ் தாவரங்கள் – விளக்கம் எடுத்துக்காட்டு – ஏதேனும் ஒன்று<br>4. நீருள்மூழ்கி வேரூன்றிய நீர் வாழ் தாவரங்கள் – விளக்கம் எடுத்துக்காட்டு – ஏதேனும் ஒன்று<br>5. நீர், நில வாழ்தாவரங்கள் எடுத்துக்காட்டு – ஏதேனும் ஒன்று | 1<br>1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| **38 (அ)** | **பயிர்பெருக்கத்தில் புதிய பண்புக்கூறுகளை உருவாக்குதல் மற்றும் அதன் தொழில் நுட்பம் :**<br><br>படிநிலைகள் :<br>• மரபணுத் தொகையத்தை வெட்டுதல் மற்றும் மாற்றியமைத்தலை போன்ற முறைகள் செய்கின்றன.<br>• மரபணு தொகை திருத்தம் – ஆலிகோ நியூக்ளியோடைடு இயக்கத் மாற்ற காரணிகள் என்ற நுட்பத்தின் மூலம் சில இணை காரங்களில் மாற்றகளை செய்தல்.<br>• ஒரே சிற்றினம் அல்லது நெருங்கிய தொடர்புடைய சிற்றினத்திற்குள் மரபணுக்கள் மாற்றப்படுவது.<br>• DNA வை மாற்றம் செய்யாமல் அதற்குள் இருக்கும் மரபணுவின் செயல்பாடுகளை ஒருங்கமைக்கும் முறை.<br><br>(அல்லது) | **1**<br><br>**2**<br><br>**1**<br><br>**1** |
| **38 (ஆ)** | **அரிசி மற்றும் தேக்கின் பொருளாதார முக்கியத்துவம் :**<br><br>**அரிசி :** கலோரி மிகுந்த எளிதில் செரிமானமாகக் கூடிய உணவு. இது தெற்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் முக்கிய உணவாக பயன்படுத்தப்படுகிறது.<br><br>அவல் **:** பொரி போன்ற அரிசி பொருட்கள் காலை உணவாகவும், சிற்றுண்டியாகவும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் பயன்படுத்தப்படுகிறது.<br><br>தவிடு : அரிசி தவிட்டில் இருந்து எண்ணெய் சமையலிலும் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.<br><br>உமி : எரிபொருளாகவும், பொதி கட்டுவதற்கும், உரம் போன்றவை தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.<br><br>தேக்கு : கரையான் மற்றும் பூஞ்சைகளின் எதிர்ப்பாற்றல் கொண்டதால் இது நீண்ட காலப் பயன்பாட்டிற்கு உகந்தது<br><br>இந்த கட்டையானது உடைதல் மற்றும் கீறலுறாததால் தச்சர்களுக்கு தோழமையானது மேலும் ரயில் பெட்டிகள் மற்றும் பாரவண்டிகள் தயாரிக்க பயன்படும் கட்டையாகும். கப்பல் கட்டுவதும், பாலம் கட்டுவதும் தேக்கு கட்டையை சார்ந்துள்ளது. படகு பிளைவுட், கதவு நிலைகள் மற்றும் கதவுகள் செய்ய பயன்படுகிறது. | 2 ½<br><br>2 ½ |